# திருக்குறளில் இயற்கை குறித்த சிந்தனைகள்

## Thoughts of Nature in *Thirukkural*

**ஸ்ரீ துர்கா பாணு இராமன்** / R. Sri Thurga Banu[1]

**Abstract**

Literature reflects both human emotions and the natural world, offering a profound understanding of the relationship between humanity and nature. *Tirukkural*, a timeless classic authored by *Tiruvalluvar*, treats nature not as a mere backdrop, but as an essential and inseparable component of virtuous living. Rooted in the principles of Deep Ecology, this article explores how *Tirukkural* elevates the sanctity of nature and highlights the necessity for humans to live harmoniously with all forms of life. By examining the natural thoughts embedded within various chapters of *Tirukkural* through the critical framework of Deep Ecology Theory, this study emphasizes the intrinsic value of nature, independent of human utility. It also sheds light on the ecological ethics subtly conveyed by *Tiruvalluvar*, encouraging a deeper ecological consciousness and a moral responsibility towards environmental preservation in contemporary society..

Date of submission: 2024-11-14
Date of acceptance: 2024-12-07
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
R. Sri Thurga Banu
Email: 22003690@siswa.um.edu.my

**Keywords:** Thiruvalluvar, Thirukkural, Nature, Thought, Deep Ecology

### முன்னுரை

'தமிழ் மறை' எனப் போற்றப்படும் திருக்குறள் அள்ள அள்ளக் குறையாத தெள்ளமுதம்; எடுக்க எடுக்க வற்றாத கருத்துச் சுரங்கம். இதனைப் பல்வேறு வடிவங்களிலும் வகைகளிலும் தமிழறிஞர்கள் மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர் மற்றும் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இளைஞர்களும் மாணவர்களும் *திருக்குறளில்* உள்ள கருத்துக்களை எளிதாகவும் விளக்கமாகவும் உணர்ந்து கொள்ள வள்ளுவர் மேற்கொண்ட முயற்சியே ஆகும் (*Puliyurg Keshikgan*, 2009). உலகில் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் முன்னோடியாகவும் சிறப்பான இலக்கியமாகவும் போற்றப்படுவது திருக்குறள் ஆகும். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருந்தாலும், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பயன்படும் ஒப்பற்ற நூலாக விளங்குகிறது (*Yogi Sri Sutthananda Bharathiyar*, 2009). *திருக்குறள்* ஒரு நடைமுறை அறவழி வாழ்வுக்கான படைப்பாகும்.

இது மனிதன் உலகத்துடனும் பல்லுயிர்களுடனும் ஓர் அறவழிப் பிணைப்பை உருவாக்க வேண்டும் என்பதைக் கூறும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது (*Yogi*, 2024). திருவள்ளுவர் கூறும் அறநெறி முறைகளை கடைப்பிடித்து உலக மக்கள் நடந்து கொண்டால், இன்றைய உலகம் அமைதியும் நலனும் நிறைந்த

[1]The author is a student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. 22003690@siswa.um.edu.my

புதிய உலகமாக மாறும். உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் மூன்றாவது இடத்தை *திருக்குறள்* வகிக்கிறது. இதுவரை 80 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது (Navalandeeva,2011). உலகப்பொதுமறை என அழைக்கப்படும் *திருக்குறளில்* புவியியல், சூழல், அரசியல், சமூகம், பொருளாதாரம், மக்கள் தொகை, கல்வி, ஊடகம் எனப் பல்வேறு கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் இயற்கை என்பது *திருக்குறளின்* முக்கியக் கூறாகவே அல்லாமல், அதன் வாழ்வியல் தத்துவத்தின் அடிப்படை ஆதாரமாகவும் அமைகிறது (M. Varadharasan,2006). இந்தத் *திறனாய்வுக் கட்டுரை திருக்குறளில்* இயற்கை குறித்த சிந்தனைகளை ஆய்வு செய்கிறது.

### ஆய்வின் நோக்கம்

தற்போதைய ஆய்வானது மூன்று நோக்கங்களை முன்னிருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. திருக்குறளில் இயற்கையைப் பற்றிய சிந்தனையை ஆய்வு செய்து அதன் கருத்துருவகத்தை வெளிக்கொணருதல்.

2. திருக்குறளில் காணப்படும் இயற்கை சார்ந்த முக்கியக் கூறுகளை அடையாளம் காணுதல்.

3. திருக்குறளில் இயற்கையின் பயன்பாடுகள் குறித்துப் பகுப்பாய்வு செய்தல்.

### ஆய்வுச் சிக்கல்

*திருக்குறள்* இலக்கியத்தில் மனித வாழ்வின் பல்வேறு பரிமாணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இயற்கையைப் பற்றிய சிந்தனை குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக, *திருக்குறளின்* இயற்கைச் சிந்தனைகள் நவீன சூழல் சிக்கல்களில் வழங்கும் வழிகாட்டுதல்களை புரிந்து கொள்வதில் ஒரு இடைவெளி உருவாகியுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் சுற்றுச்சூழல் சிக்கல்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில், இயற்கை குறித்த பாரம்பரியச் சிந்தனைகளை மீண்டும் ஆராய்வது அவசியமாகின்றது. இந்நிலையில், *திருக்குறளில்* காணப்படும் இயற்கைச் சிந்தனைகளையும் அவற்றின் தத்துவ அடிப்படையையும் ஆய்வு செய்து, நவீன சூழல் பிரச்சினைகளுக்கு பரிந்துரைக்கும் நோக்கில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

### ஆய்வின் முன்னோடிகள்

"தமிழியமும் மனிதவளமேம்பாடும்" (2020) என்கின்ற நூலினை பத்மநாபன் இயற்றியுள்ளார். இந்நூலில் *திருக்குறளில்* நல்லிணக்கம் மற்றும் சமநிலை பற்றிய தத்துவக் கருத்துக்களை ஆராய்கிறது. சமநிலைகளைப் பற்றிதான் இந்த ஆய்வு முன் வைக்கிறது. சமநிலை என்பது மனிதர்கள் மட்டுமல்லாமல் எல்லாம் உயிரினங்களிடமும் இருக்க வேண்டிய முக்கியமான கூறுகள் ஆகும். இந்த சமநிலையானது இயற்கையிலும் நிலவ வேண்டும் என்ற முக்கியமான சித்தாந்தமாக விளங்குகிறது. எல்லாவற்றிலும் சமநிலையாக இருக்கும் போது இந்த இயற்கையானது நன்மைகளை செய்யும் என்ற கூற்றுக்களை இந்த இந்நூல் விளக்குகிறது. தற்போதைய ஆய்வில் *திருக்குறளில்* இயற்கை குறித்த சிந்தனைகளை ஆய்வு செய்கிறது. இயற்கை என்கின்ற அடிப்படை கருத்துக்கு சென்றாலும் கூட இயற்கையில் சமநிலை பார்ப்பதற்கான அறிவுருவாக்கத்தை தற்போதைய கட்டுரை காட்டுகிறது. இதன் மூலம் இயற்கை நேசிப்பது மற்றும் சமநிலையாக இருப்பது எப்படி என்று ஒரு சித்தாந்தம் இதில் இருந்து வெளிப்படுகிறது. இது தற்போதைய ஆய்வில் இயற்கை சமநிலையை எப்படி நிலை நிறுத்துவது என்கின்ற குறிப்புகளை *திருக்குறளில்* இருந்து தேடி ஆய்வு செய்வதற்கு ஒரு வழிக்கோலாக அமைகிறது.

### ஆய்வு நெறி

இந்த ஆய்வு விளக்க முறை ஆய்வின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. விளக்க முறை ஆய்வு

என்பது, ஆராய்ச்சி செய்யப்படும் நிகழ்வுகளின் தன்மைகள் மற்றும் உள்ளடக்கங்களை ஆழமாகவும் முறையாகவும் விவரிக்கும் ஒரு ஆராய்ச்சி முறைமையாகும். இந்த முறை, ஒரு தலைப்பின் சிறப்பம்சங்களை கவனித்து பதிவு செய்து, பகுப்பாய்வு செய்ய உதவுகிறது. விளக்க முறை ஆய்வு தற்போது நிலவும் நிகழ்வுகளை ஆராய்வதைக் குறிக்கிறது; இது "எது, எப்போது, எங்கு, எப்படி" என்ற கேள்விகளுக்கு பதிலளிக்கிறது ஆனால் "ஏன்" என்ற கேள்விக்கு பதிலளிக்காது.

இந்த ஆய்வில், திருக்குறளில் இயற்கை குறித்த சிந்தனைகளை விளக்க முறையில் ஆய்வு செய்து, அவற்றின் தத்துவ அடிப்படைகளையும் நவீன சூழல் நிலைகளுடனான தொடர்புகளையும் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. *(Sunaina Singh, 2023)*

### ஆழ்ந்த சுற்றுச்சூழலியல் கோட்பாடு

ஆழ்ந்த சுற்றுச்சூழலியல் *(Deep Ecology)* என்பது மனித தேவைகளுக்காக மட்டுமே இயற்கையைப் பயன்படுத்தும் மனப்போக்கை எதிர்ப்பது மற்றும் எல்லா உயிரினங்களும் (மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள்) தனிப்பட்ட மதிப்பைக் கொண்டவை என்பதைக் கடைப்பிடிக்கும் சுற்றுச்சூழல் தத்துவமாகும். இந்தக் கோட்பாடு ஆழமான சுற்றுச்சூழல் இயக்கங்களுக்கு அடிப்படையாக திகழ்கிறது மற்றும் மனிதர்கள் இயற்கையுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் ஆழமான, முறையான மாற்றங்களுக்கு வாதிடுகிறது *(Naess, 1973)*. ஆழ்ந்த சுற்றுச்சூழலியலின் மையக் கருத்து இரண்டு அடிப்படை சிந்தனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவை உயிரணு சமத்துவம் *(Biospheric Egalitarianism)* மற்றும் தன்னறிவு *(Self-Realization) (Naess, 1987)*. உயிரணு சமத்துவம் என்பது அனைத்து உயிரினங்களான மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், மற்றும் சூழலியல் அமைப்புகள் ஒரே நெறிமுறைக் கணிப்பைப் பெற வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இது இயற்கையை சாதனமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அதற்குச் சமமான மரியாதையை அளிக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. தன்னறிவு என்பது தனிப்பட்ட அடையாளத்தை மீறி, மனிதர்கள் தங்களை விரிவாகக் கருதி, பெரிய இயற்கை உலகத்தின் ஒரு பகுதியாக உணர வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இது மனிதர்கள் மற்றும் இயற்கை இடையேயான பரஸ்பர இணைப்பினை புரிந்துகொள்வதை முக்கியமாகக் கொண்டுள்ளது.

### இயற்கை குறித்த சிந்தனைகள்

இயற்கை மனித வாழ்க்கையில் எப்போதும் முக்கியமான முக்கிய பங்கு வகித்து வருகிறது. வாழ்வாதாரம், தங்குமிடம் மற்றும் நல்வாழ்வை வழங்குகிறது. பண்டைய தமிழ் இலக்கியமான திருக்குறள், இயற்கையின் முக்கியத்துவத்தையும் அதன் பாதுகாப்பையும் ஆழமாக வலியுறுத்துகிறது. இது இயற்கையின் பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்குறள்களை பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டு, திருக்குறள் சுற்றுச்சூழல் நெறிமுறைகளையும் நிலையான வாழ்க்கையையும் எவ்வாறு முன்வைக்கிறது என்பதையும் விளக்குகிறது.

### இயற்கையை பாதுகாத்தல்

இந்த உலகம் இயற்கையின் கொடைகளால் உருவாகியுள்ளது. உணவு, நீர், காற்று போன்ற அடிப்படை தேவைகளுக்கே இயற்கையே முதன்மை ஆதாரம். ஆனால் அண்மைக்காலங்களில் மனித செயல்களால் சூழல் மாசடைந்து, பருவநிலை மாற்றங்கள், பேரழிவுகள் அதிகரித்து வருகின்றன. தொழிற்சாலைகள், நெகிழி பயன்பாடு, வாகன புகை போன்ற காரணிகள் சுற்றுச்சூழலை சீரழிக்கின்றன. இதன் விளைவாக மண்சரிவு, மழை குறைதல், உயிர்பன்மை பாதிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இயற்கையை பாதுகாக்க மரம் நடுதல், மாசு கட்டுப்பாடு, மண்வள பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகள் அவசியமானவை. திருக்குறள் இயற்கையின் மதிப்பை உணர்த்தி, அதை பாதுகாக்கும்

கடமையை வலியுறுத்துகிறது. இயற்கை இல்லையெனில் மனித வாழ்வும் இல்லை என்பதே அதன் ஆழமான செய்தி. (Thamizhsudar,2023).

### இயற்கையை போற்றுதல்

இயற்கை உலகின் அனைத்துயிர்களுக்கும் கடவுள் அருளிய சிறந்த பரிசாகும். தெளிந்த நீர், தூய காற்று, ஆரோக்கியமான உணவு போன்ற நன்மைகளை வழங்கும் இயற்கை, மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆனால், மரவெட்டும், காடழிப்பு, நீரோடைகள் மாசுபாடு போன்ற செயல்கள் சுற்றுச்சூழலை பாதித்து, பேரழிவுகளையும் நோய்களையும் உருவாக்குகின்றன. *திருக்குறள்* இயற்கையை மதித்து பாதுகாக்க வேண்டும் என்பதைக் கூறுகிறது. ஐம்பூதங்களை மதித்து, உயிரினங்களின் வாழ்வுரிமையை காத்து, சுற்றுச்சூழலைப் பேணுவதன் மூலம் உலகில் சமநிலையை நிலைநிறுத்த வேண்டும். இயற்கையை போற்றும் விழிப்புணர்வை அடுத்த தலைமுறையினருக்குப் பரப்புவதன் அவசியத்தையும் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார் (Shaam, 2020).

### இயற்கையை நேசித்தல்

இயற்கை அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை வளங்களை வழங்கும் ஆதாரமாகும். பூக்கள், பறவைகள், ஆறுகள், காடுகள் போன்ற அற்புதங்கள் இயற்கையின் அழகைக் காட்டுகின்றன. இயற்கை மனிதர்களின் மன அழுத்தத்தை நீக்கும் தன்மையையும் உடையது. *திருக்குறளில்*, இயற்கையின் மீது நேசமும் மரியாதையும் வளர்க்க வேண்டியது முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. இயற்கையை நேசிப்பது என்பது அதன் மதிப்பை உணர்வது, அதன் நன்மைகளைப் பாதுகாப்பது என்றும் திருவள்ளுவர் விளக்குகிறார் (thinamalar,2023).

### முடிவுரை

*திருக்குறள்* இயற்கையை ஒரு வாழ்க்கை முறை மற்றும் அறநெறியின் அடிப்படையாகக் காண்கிறது. இயற்கையை மதித்து, அதனுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற அறிவுறுத்தலே *திருவள்ளுவரின்* முக்கியமான பாடமாகும். இந்நூல், நவீன சூழல் சிக்கல்களுக்கு தீர்வு அளிக்கக் கூடிய பாரம்பரிய அறங்களை நமக்கு வழங்குகிறது. எனவே, *திருக்குறளில்* இயற்கை குறித்த சிந்தனைகள் நவீன உலகிற்கு முக்கியமான வழிகாட்டியாக அமைகின்றன.

## References


M. Varadharasan (2006). *Pazhamtamizh Ilakkiyathil Iyarkkai.*

Naess, A. (1973). *The Shallow and the Deep, Long-Range Ecology Movement: A Summary.*

Naess, Arne (1987). *Self-Realization: An Ecological Approach to Being in the World.*

Navalandeeva. (2011). *Thirukkural- Sila Theriyatha Seithigal*

Puliyurg Keshikgan (2009). *Thirukkural Puthiya Urai.*

R. Karunanidhi, K. Sivakumar, C. Bhuvaneswari, V. Irani (2020). *Tamiliyavum Manithavala Meempaadum*

Shaam. (2020). *Iyarkaiyai Potruvom.*

Singh, S. (2023). *What is Descriptive Research? Definition, Methods, Types and Examples.*

Thamizhsudar. (2023). *Iyarkaiyai Paathukaappom Kadthurai*

Thinamalar. (2023). *Iyarkaiyai Nesippom; Suvaasippom.*

Thinamani. (2014). *Tamil Arinjar Arivom – Thiruvalluvar Thirukkural*

Yogi Sri Sudhananda Bharathiyar. (2009). *Thirukkural Inbam.*

Yogi, P. (2024). *What does Thiruvalluvar's Thirukural teach about compassion and ethical living?*